[16th July 1962

கல் ஸ்டாப் ஆக வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் அவர்களைப் புறக்கணிப்பது, அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்காமல் இருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியானால் இவ்விஷயத்தை கவனித்து அந்தப் பகுதி மக்களுடைய குறையை நிவர்த்திக்க அரசாங் கத்தின் பிரதிநிதி மூலமாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக்கொள் வார்களா ?

கனம் திரு. ஆர். வெங்கட்ட்ராமன் : இது விஷயமாக சர்க்காருக்கு எழுதி அனுப்பினால் நம்முடைய டைரெக்டர் மூலமாக என்ன நியாயம் வழங்க வேண்டுமோ அதை வழங்கத் தயாராய் இருக்கிறேன்.

ஒகேனக்கல் அணைத்திட்டம்.

*** 331-E** கேள்வி.—**திரு. நா. ப. செங்கோட்டுவேலு:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஒகேனக்கல் அணைத்திட்டத்தினால் பயன்பெறும் வட்டங்கள் யாவை ?

(இ) அந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்படும் ?

THE HON. SRI R. VENKATARAMAN : (a) & (b) The Hogenekal Scheme is under investigation. The consent of Mysore to take up the detailed investigation of the scheme is awaited. It is too early to say when the scheme will be completed.

திரு. நா. ப. செங்கோட்டுவேலு : அப்படி ஒரு திட்டம் ஏற்பட்டால் ராசிபுரம் போன்ற பகுதிகளுக்குப் பாசனவசதி அளிக்க வழி வகை இருக்கிறதா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : இது பாசனத் திட்டம் அல்ல. இதனால் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட பாசனத்திற்குக் கிடைக்காது. இது மின்சாரத் திட்டம்.

கனம் சபாநாயகர் : கேள்விகள் முடிவடைந்தன.

[*Note*.—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

MR. SPEAKER : Notice under Rule 41 of Sri M. Kalyanasundaram, which has to be taken up to-day, is postponed to 18th July 1962.

II.—PRIVILEGE MATTER *re* REMARKS IN THE 'MURASOLI' ABOUT THE LEADER OF THE HOUSE.

MR. SPEAKER : I have received notice of a matter of privilege from Sri J. Matha Gowder regarding the remarks in the editorial of the Tamil Daily ' Murasoli ', dated 14th July 1962 about the Hon. the Leader of the House. The hon. Member may now speak.

திரு. ஜே. மாதா கவுடர் : கனம் சபாநாயகர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் உரிமைப் பிரச்சினை போலீஸ் மானியத்தின் மீது கனம் நிதி மந்திரி அவர்கள் இந்த மன்றத்திலே பேசியதைப் பற்றிய குறிப்புடைய தலையங்கம் ஒரு பத்திரிகையில் வந்திருப்பது பற்றித்தான். அதாவது, 14—7—1962-ம் தேதி வெளிவந்திருக்கும் ஒரு தமிழ் தினசரிப் பத்திரிகையிலே இந்த மன்றத்தின் கௌரவத்தையே குலைக்கக்கூடிய

அளவில் தலையங்கம் எழுதப்பட்டிருப்பதை உங்கள் மூலமாக சபையின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். அந்தப் பத்திரிகையின் பெயர் " முரசொலி ". 14—7—1962-ஆம் தேதி ''முரசொலி'' பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பதை உங்கள் அனுமதியுடன் சபையில் படித்துக்காட்ட விரும்புகிறேன். " எது துரோகம் ? திராவிட நாடு திராவிடருக்கே. இது துரோகமா ? " என்பதை அடுத்து மிகவும் முக்கியமானதும், ஆட்சேபகரமானதுமாக விஷயம் எழுதப்பட்டிருக்கிறது.

> " படித்துவிட்டுப் பேசுங்கள்—என்று அடிக்கடி பேசும் பக்தவத்சலம் குடித்துவிட்டுப் பேசுபவர்போல் உளறியிருக்கிறார் "

என்று அங்கே எழுதப்பட்டிருக்கிறது. போலீஸ் மானியத்தின்மீது கனம் அங்கத்தினர் ஒருவர் பர்த்தோலி பற்றி குறிப்பிட்டதற்கு, " அவ்விஷயத்தை நன்றாகப் படித்துத் தெரிந்துகொண்டு பேசவேண்டும் " என்று கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவ்விஷயத்தை கருத்தில்கொண்டு, " படித்துவிட்டுப் பேசுங்கள் என்று பேசும் பக்தவத்சலம் குடித்துவிட்டுப் பேசுபவர்போல் உளறியிருக்கிறார் " என்று அந்தப் பத்திரிகையில் எழுதப்பட்டிருப்பது சபையின் கௌரவத்திற்கே இழுக்கானதாகும். அதோடு அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் யார் என்றும் பார்க்கவேண்டும். அந்தப்பத்திரிகையின் ஆசிரியர் இந்த மன்றத்திலே ஓர் அங்கத்தினராக இருக்கக் கூடியவர் திரு. மு. கருணாநிதி அவர்கள்தான் அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் என்றும் போடப்பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது ஓர் அங்கத்தினரே இந்தச் சபையில் நடந்த ஓர் நடவடிக்கையைப்பற்றி இவ்வாறு எழுதுவது என்றால் இன்னும் மிகமிக வருந்தவேண்டியதாக இருக்கிறது. வேறு யாராவது எழுதியிருந்தாலும் அது வேறு ஒரு விதம். வேறு எங்காவது நடந்த நிகழ்ச்சியைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தாலும் நாம் கவலைப்படவேண்டியதில்லை. இந்த மன்றத்திலே பேசியதை வைத்து இங்கு அங்கத்தினராக இருக்கக்கூடிய ஒருவரே தம் பத்திரிகையில் இவ்வாறு எழுதுவது என்றால் இது மிகவும் ஆட்சேபகரமானது, அங்கத்தினர்களுடைய உரிமையைப் பாதிக்கக்கூடியது என்பதை சபையின் கவனத்திற்கும், உங்கள் கவனத்திற்கும் நான் கொண்டுவருகிறேன். அதே பத்திரிகையில் ஐந்தாறு பத்திகள் தள்ளி—யார் துரோகிகள் என்று போடப்பட்டிருக்கிறது. இந்தச் சபையில் 11—7—1962 அன்று நடந்த நிகழ்ச்சிகளை அப்படியே வேறு ஓர் இடத்தில் பிரசுரித்திருக்கிறார்கள். அப்புறம் ஐந்தாறு பத்தி தள்ளி " யார் துரோகிகள் ? " என்று அந்த நடவடிக்கையை அடிப்படையாகக்கொண்டு எழுதியிருக்கிறார்கள். தவிர ஆசிரியருடைய குறிப்பிலேயே அந்த ஒரு விஷயத்தையும் தவிர " துரோகிகள், தேசபக்தர்கள்போல் வேடமிடுகிறார்கள். கன்னக்கோல் ஏந்துபவர்கள் செங்கோல் ஏந்துபவர்கள் போல் சாயம் பூசிக்கொள்கிறார்கள் " என்று மிகவும் ஆட்சேபகரமானதாக எழுதியிருக்கிறார்கள். எல்லாவற்றையும் விட " படித்துவிட்டுப் பேசுங்கள் என்று பேசும் பக்தவத்சலம் குடித்துவிட்டுப் பேசுபவர்போல் உளறியிருக்கிறார் " என்று எழுதினால் இனிமேல் இந்தச் சபையில் யாரும் உணர்ச்சிவசப்பட்டே பேசமுடியாது. பேசினால் இம்மாதிரி ஒன்றுக்கொன்று எழுதுவார்களோ என்று அச்சத்தை ஊட்டுகிறது. பல சமயங்களில் ஒருவர்க்கொருவர் பேசும்போது உணர்ச்சி வசப்படுவதைப் பார்த்திருக்கிறோம். அன்றைக்கு கனம் அமைச்சர் அவர்கள் கூட உணர்ச்சி வசப்பட்டுவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. அப்படி யாராவது ஒரு அங்கத்தினர் பேசுவாரானால் இம்மாதிரியாக தரக்குறைவாகப் பத்திரிகைகள் எழுதிவிடுவார்களோ என்ற நிலை ஏற்படுகிறது. ஆதலால், இதை உரிமைக் கமிட்டிக்கு அனுப்பவேண்டும், அவர்கள் முடிவுக்கு விட்டுவிடவேண்டும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

திரு. மு. கருணாநிதி : சட்டமன்றத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் மாதா கவுடர் எழுப்பிய உரிமை பிரச்னையின் மீது, அவர் குறிப்பிட்ட அந்தப் பத்திரிகையின் ஆசிரியராக நான் இருக்கிறேன் என்ற வகையிலும், இந்தச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற வாய்ப்புப் பெற்ற காரணத்தினாலும், ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நான் பத்திரிகையின் ஆசிரியராக இருந்தாலும், பத்திரிகையில் ஆசிரியரைத்தவிர அடிக்கடி எழுதக்கூடிய வாய்ப்பு உதவி ஆசிரியர்களுக்குத்தான் உண்டு என்பதை இங்குள்ள அனைவரும் உணர்வார்கள். அந்த வகையிலே கனம் உறுப்பினர் திரு. மாதா கவுடர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வாசகம் உள்ளபடியே வருத்தத்தைத் தரத்தக்கது. என்னுடைய கவனத்திற்கு அது நேற்றையதினம் கொண்டுவரப்பட்டது. நான் என்னுடைய பத்திரிகை உதவி ஆசிரியரை அழைத்து, கண்டித்து, அதுபற்றிய விளக்கம் அவரிடத்திலே கேட்டிருக்கிறேன். ஆகவே, அதற்காக நானும் உள்ளபடியே வருந்துகின்றேன் என்பதையும் இந்த மாமன்றத்தில் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். வருந்துவது மாத்திரம் அல்ல. அப்படிப்பட்ட அந்த இரண்டு வரிகளையும் தவருக எழுதியமைக்காக பத்திரிகையிலேயே வருத்தம் தெரிவிக்கவேண்டும் என்றும் கூறியிருக்கிறேன். நாளையதினம் பத்திரிகையிலே அந்தச் செய்தி வருவதாக இருக்கிறது. ஆகவே, செய்யப்பட்ட தவறுதலுக்காக வருந்துவது தமிழனுடைய பண்பு என்ற வகையிலே நான் என்னுடைய வருத்தத்தை—ஆழ்ந்த வருத்தத்தை—அதற்காகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி முடிக்கின்றேன்.

* **கனம் திரு எம். பக்தவத்சலம் :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்தப் பிரச்சனை என்னைப் பற்றியதாக இருக்கிறது. ஆகவே, இதைப் பற்றி நான் ஒன்றும் கூறப்போவதில்லை. இதைப்பற்றிய முடிவைத் தங்களுக்கும் இந்த மன்றத்திற்குமே நான் விட்டுவிடுகிறேன். ஆனால், ஒன்று கூற விரும்புகிறேன். குடித்தவன்போல் நடிப்பதற்குக்கூட எனக்குத் தெரியாது. கனம் எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அது, தான் எழுதியது அல்ல என்று சொல்லி, அப்படி எழுதப்பட்டதைக் குறித்து வருத்தம் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகையால், நான் இதைப்பற்றி ஒன்றும் கூறுவதற்கில்லை என்று சொன்னபோதிலும், எதிர்க் கட்சித்துணைத் தலைவர் அவர்கள், இவ்வளவு தூரம் வருத்தம் தெரிவித்ததற்குப் பிறகு இதன் மீது மேலும் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டாம் என்ற கருத்தை மட்டும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, நண்பர் கனம் திரு. கருணாநிதி அவர்கள் கூறியதுபோல், இது ஒரு வருந்தத்தக்க விஷயம் தான். கனம் அமைச்சர்களைப் பற்றி நாம் இங்கே காரசாரமாகப் பேசலாம். அதற்கு உரிமை உண்டு. ஆனால், எந்த ஒரு அமைச்சரையோ அல்லது எந்த ஒரு அரசியல்வாதியையோகூட, அம்மாதிரி பாஷையில் எழுதுவதானது அரசியல் பண்பு வளருவதற்கு உதவிகரமாக இருக்காது என்பதுதான் என்னுடைய அபிப்பிராயம். "குடித்தவன் போல்நடிக்கக் கூட எனக்குத் தெரியாது" என்று கனம் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். எதுகை, மோனை, அடுக்குமொழி இவைகளிலேயே கவனம் செலுத்துவதால் கருத்து என்ன என்பதில் சில வாலிபர்கள் கவனம் செலுத்தத் தவறிவிடுகிறார்கள். இதுதான் நம்முடைய கனம் திரு. கருணாநிதி அவர்களுக்கு உதவி புரிய வந்த வாலிபர்களால் நேர்ந்த தொந்தரவு என்பதை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்றே நான் நினைக்கிறேன். நம்முடைய அரசியல்வாதிகளில் குடித்துவிட்டுப் பேசும் அரசியல்வாதிகளும் இல்லாமல் இல்லை. என்றாலுங்கூட, அதைச் சொல்லிக்கொள்வது கௌரவமானதல்ல. அதுபோல என்னுடைய பத்திரிகையில் எழுதியிருந்தாலுங்கூட, பகிரங்கமாக நான் கண்டிப்பேன். இப்பொழுது நண்பர் திரு. கருணாநிதி அவர்கள் தங்களுடைய உதவி ஆசிரியரைக் கண்டித்தது போல, வேறு ஒருவரைப்பற்றி—உண்மையிலேயே குடித்துவிட்டுப் பேசும் அரசியல்வாதியைப்பற்றி—அம்மாதிரி எழுதியிருந்தாலும் நானும் அதைப் பகிரங்கமாகக் கண்டிக்கத்தான் முன் வருவேன். எல்லாக் கட்சிகளும் சேர்ந்திருக்கும் இந்தச் சபையின் கவுரவம் மட்டுமல்ல, அரசியல்வாதிகளின் கவுரவம் சம்பந்தப்பட்ட பிரச்னை இது. சபை அங்கத்தினர்களையோ, சபையையோ அவதூறு செய்வதாக மட்டும் நான் கருதவில்லை. ஒரு அரசியல்வாதியைப்பற்றி, இன்னொரு அரசியல்வாதி எப்படிப் பேசவேண்டும், எப்படி எழுதவேண்டும் என்பதிலே ஒரு ஒழுங்கு, முறை இருக்கவேண்டும். இம்மாதிரி உரிமைப் பிரச்னை

16th July 1962] [திரு மீ. கலியாணசுந்தரம்]

கொண்டுவருவது அவசியம் என்றுதான் நான் கருதுகிறேன். உரிமைப் பிரச்னை வந்து, வந்துதான் நமக்குள்ளாக கருத்துத் தெளிவு ஏற்பட்டு, எது எழுதலாம், எது எழுதக்கூடாது என்று இப்பேர்ப்பட்ட பண்புகள் வளரவேண்டும் என்ற வெகுஜன அபிப்பிராயத்தை உருவாக்கும் மன்றமாகத்தான் இதை நான் கருதுகிறேன். நண்பர் கனம் திரு. மாதா கவுடர் அவர்கள் கொண்டுவந்த உரிமைப் பிரச்னை சரியானது தான். அதைக் குறித்து கனம் திரு. கருணாநிதி அவர்கள் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்ததும் அவர்கள் இந்த பண்புகளை நிலைநாட்ட வேண்டும் என்பதிலே ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதைப்போல் பெருந்தன்மையுடன் கனம் நிதி அமைச்சர் அவர்களும் நடந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய கனம் நிதி அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் பொருட்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த எழுத்தை வைத்தல்ல நம்முடைய நிதி அமைச்சர், முதல் அமைச்சர், அமைச்சர் திரு. கக்கன் இவர்களைப்போன்ற தேசபக்தர்களை இந்த நாடு நிர்ணயிக்கப்போவது. இன்றைக்கு அரசியல் ரீதியிலே எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இருக்கலாம், தீவிரமாகத் தாக்கிப் பேசலாம். இருப்பினும் சுதந்திரம் பெற்று இன்றைக்கு ஓரளவு உரிமையை அனுபவிக்கின்றோமே இதற்கு ஒருகாலத்திலே அவர்கள் செய்திருக்கும் சேவையை இந்த நாடு எப்பொழுதும் மனதில் இறுத்திக்கொண்டுதான் இருக்கும். அப்பேர்ப்பட்ட தாக்குதல் அவர்களை ஒன்றும் பாதிக்காது. கனம் திரு. கருணாநிதி அவர்கள் தெரிவித்த வருத்தத்தைப் பெருந்தன்மையோடு இந்தச் சபை ஏற்றுக் கொண்டு இதை முடிப்பதுதான் உசிதம் என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, கனம் உறுப்பினர் திரு. மாதா கவுடர் அவர்கள் கொண்டுவந்த பிரேரேபணையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கருத்து, உள்ளபடியே இப்பொழுது நான் கேட்க வருந்தத்தக்க ஒன்றாகத்தான் அமைந்திருக்கிறது. அதை அந்த உறுப்பினர் அவர்கள் தம்முடைய உரையில் எடுத்துச் சுட்டிக் காட்டினார்கள். தம்மை அறியாமலேயே, தமக்குக் கீழே இருக்கும் துணை ஆசிரியர்களால் இந்தத் தவறு ஏற்பட்டுவிட்டது என்றும், அதற்காகத்தாம் வருந்துவதாகவும், இந்த வருத்தத்தைப் பலரும் அறிகின்ற வகையில் அந்தச் செய்தித்தாளில் வெளியிடுவதாகவும் கனம் உறுப்பினர் திரு. கருணாநிதி அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த அவையினுடைய முதல்வர் கனம் நிதி அமைச்சர் அவர்களும் மிகப் பெருந்தன்மையோடு, ஏற்பட்ட அந்தத் தவறுக்கு வருந்திய அந்த வருத்தத்தை ஏற்றுக்கொண்டு, இந்த அளவோடு இந்தப் பிரச்னையை விட்டுவிடலாம் என்று கூறியிருப்பதும் மிக வரவேற்கத்தக்க ஒன்று ஆகும். அந்தக் கருத்தைத்தான் கனம் திரு. கலியாணசுந்தரம் அவர்களும் தெரிவித்திருக்கிறார்கள். நானும் இந்த முறையிலேயே, இந்தப் பிரச்சினையை, இந்த வருத்தம் தெரிவிக்கின்ற அளவிலே வந்திருக்கிற காரணத்தால், அனைவரும் இதுபற்றி வருந்தக் கூடிய நிலைமை இருக்கிற காரணத்தால், இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் எதிர்காலத்தில் நாம் பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு உள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை உணர்ந்துகொள்வதற்கு எடுத்துக்காட்டாக அமைந்திருக்கிற காரணத்தால், இப்பேர்ப்பட்ட தவறுகள் ஏற்படாத அளவு பண்பாட்டை வளர்க்கும் முயற்சியில் நாம் ஈடுபடவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் முறையிலே இந்தப் பிரச்சினையை, இந்த வருத்தம் தெரிவிக்கும் அளவில் விட்டுவிடலாம் என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கனம் சபாநாயகர் : இந்த உரிமைப் பிரச்னையைப் பார்க்கும்போது உண்மையிலேயே எல்லோருக்கும் வருத்தம் ஏற்பட்டிருக்கிறது. அந்த வருத்தத்தைப் பிரதிபலிக்கும் வகையிலே, தலைவர்கள் எல்லோரும் தங்களுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் பிரச்னையில் மேல் நடவடிக்கை எடுத்து, உரியவர்களுக்குத் தண்டனை கொடுப்பதைவிட, மனிதனை மனிதனாக, பண்பாடு உடையவனாக மாற்ற

வேண்டியதுதான் எல்லோருடைய கடமை என்ற வகையில், மேல் நடவடிக்கை எடுக்காமலேயே இந்தப் பண்பாடு ஏற்பட்டுவிடும் என்ற நம்பிக்கை எனக்கு இருப்பதால், கனம் அங்கத்தினர் திரு. மு. கருணாநிதி அவர்கள் வருத்தம் தெரிவித்ததை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆகையினாலே இந்தப் பிரச்னையில் மேல் நடவடிக்கை எதுவும் வேண்டாம் என்று நான் முடிவு செய்கிறேன். மேலும், கனம் அங்கத்தினர் திரு. கருணாநிதி அவர்கள் சொன்னபடி, அவர்கள் தெரிவித்த வருத்தத்தை அந்தப் பத்திரிகையில் பெரிய எழுத்தில் போடுவதோடு, இனி இம்மாதிரி நிலைமை ஏற்பட இடம் தராமலிருக்குமாறும் கேட்டுக்கொண்டு, இந்த உரிமைப் பிரச்னையைத் தள்ளுபடி செய்கிறேன்.

III.—INFORMATIGN *re* CALLING ATTENTION NOTICES.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, விதி 41-இன் கீழ் நான் ஒரு நோடீஸ் கொடுத்திருக்கிறேன். அதாவது என்னுடைய தொகுதியில், பீமநகர் என்னும் இடத்தில் ஏற்பட்ட ஒரு தீ விபத்து பற்றி. . .

கனம் சபாநாயகர் : "கைத்தறி" பற்றிய பிரேரபணை 20-ம் தேதி எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : "கைத்தறி" பற்றிய பிரேரணையை ஒத்திப்போட்டிருக்கிறீர்கள். ஆனால்," "தீ விபத்து" பற்றிய பிரேரணையை சீக்கிரம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : அதுபற்றிக் கவனிக்கிறேன்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : விதி 41-இன் கீழ் நோடீஸ் கொடுத்திருக்கிறேன். இது மிகவும் முக்கியமான பிரச்னை. 200 வீடுகள் தீக்கிரையாகி இருக்கின்றன. . . .

MR. SPEAKER : Is the Hon. Minister ready to make the statement? Unless he is ready, I cannot take it up.

THE HON. SRI V. RAMAIAH : I will make a statement on the 18th instant.

திரு. மீ. கலியாணசுந்தரம் : "தீ விபத்து" பற்றிய பிரேரபணையை 18-ம்தேதி வைத்துக்கொள்ளலாம். கைத்தறியைப்பற்றி வேண்டுமானால் பிறகு எடுத்துக்கொள்ளலாம்.

MR. SPEAKER : I have no objection.

IV.—PRIVILEGE MATTER *re* COMMENTS IN THE BHARATHAM ABOUT A MEMBER'S SPEECH.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் சபாநாயகர் அவர்களே, சென்ற சட்டசபைத் தொடரில் காங்கிரஸ் பத்திரிகையான "பாரதம்" என்ற பத்திரிகையில் . . .

கனம் சபாநாயகர் : நீங்கள் எதைப்பற்றி சொல்கிறீர்கள் ?

SRI V. KRISHNAMOORTHY : Sir, I have raised a privilege issue the consideration of which has been adjourned. It has not come up so far. I am just reminding the Chair about it.

MR. SPEAKER : Is the hon. Member pressing it?

SRI V. KRISHNAMOORTHY : Yes, Sir.